தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்

N.S.K
தங்கமாளிகை
தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களுக்கு
செய்கூலி,
சேதாரம்
இல்லை
96557 79285
98429 78833

| Vol: 02 | Issue: 144 | 4 Pages | 22.12.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 144 | 4 பக்கங்கள் | 22.12.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்**
**பிறவினை எல்லாந் தரும்**
**விளக்கம்:**
**அறமாகிய செயல் எது என்றால் ஒரு உயிரையும் கொல்லாமையாகும், கொல்லுதல் அறமல்லாத செயல்கள் எல்லாவற்றையும் விளைக்கும்.**

## கிரீஸ் கடற்கரை அருகே அகதிகள் படகு கவிழ்ந்து விபத்து 8 பேர் உயிரிழப்பு

ஏதென்ஸ், டிச.21

கிரீஸ் நாட்டின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ரோட்ஸ் தீவு அருகே கடற்பகுதியில், அகதிகள் பயணம் செய்த படகு ஒன்று கடலில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. ரோந்து படகு நெருங்கி வருவதை அறிந்து தப்பிக்க முயற்சிக்கும்போது இந்த விபத்து நிகழ்ந்ததாக கடலோர காவல்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக படகுகள் மற்றும் ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்பு படையினர் வந்து சேர்ந்தனர். நீண்ட நேர போராட்டத்திற்கு பிறகு 18 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர். ஆனால், இந்த விபத்தில் 8 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். மேலும் சிலர் காணாமல் போனதாக கூறப்படும் நிலையில், அவர்களை தேடும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அமெரிக்காவில் நடந்த அழகி போட்டி: 'மிஸ் இந்தியா' பட்டத்தை வென்ற சென்னை பெண்




நியூயார்க், டிச.22

வாஷிங்டன் நியூ ஜெர்சியில் நடந்த 2024 மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. பட்டத்தை சென்னையில் பிறந்த, இந்திய அமெரிக்க இளம்பெண் கேட்லின் சாண்ட்ராபெற்றுள்ளார். நியூ ஜெர்சியில் இந்திய விழாக் குழு ஏற்பாடு செய்த மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. மற்றும் மிஸஸ் இந்தியா யு.எஸ்.ஏ., மிஸ் டீன் இந்தியா யு.எஸ்.ஏ. போட்டியானது நடைபெற்றது.

இப்போட்டியின் மூன்று பிரிவுகளில் 25 மாகாணங்களில்இருந்து 47 போட்டியாளர்கள்கலந்துகொண்டனர்.அவர்களில்19வயதானகேட்லின், மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. பட்டத்தைப் பெற்றார். சென்னையில் பிறந்த கேட்லின் கடந்த 14 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருகிறார். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 2ம் ஆண்டு பட்டப்படிப்பு படித்து வரும் கேட்லின், மாடலிங் மற்றும் சினிமா துறையில் ஜொலிக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "நம் சமூகத்தில் எப்போதும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தவே நான் விரும்புகிறேன். பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றில் கவனம் செலுத்த விரும்புகிறேன்" என்று கேட்லின் கூறினார்.

மேலும் இல்லினாய்சைச் சேர்ந்த சம்ஸ்கிருதி சர்மா 'மிஸஸ் இந்தியா யு.எஸ்.ஏ.' என்ற பட்டத்தையும், வாஷிங்டனைச் சேர்ந்த அர்ஷிதா கத்பாலியா 'மிஸ் டீன் இந்தியா யு.எஸ்.ஏ.' பட்டத்தையும் வென்றனர். இவர்களுக்கு ரிஜுல் மைனி, மிஸ் இந்தியா யு.எஸ்.ஏ. 2023 மற்றும் சினேகா நம்பியார், மிசஸ் இந்தியா யு.எஸ்.ஏ. 2023 ஆகியோர் முறையே மகுடம் சூட்டினர்.

## உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ள தயார் ரஷிய அதிபர் புதின் அறிவிப்பு?



மாஸ்கோ, டிச.22

நேட்டோ அமைப்பில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷியா 2022ம் ஆண்டு போர்தொடுத்தது. இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் சப்ளை, பொருளாதார உதவிகளை வழங்குகின்றன. அதேபோல் ரஷியாவுக்கு அதன் நட்பு நாடுகளான சீனா, ரஷியா போன்றவை ஆதரவாக செயல்படுகின்றன.

தற்போது உக்ரைனுக்குள் நுழைந்து ரஷியாபடைகள்தொடர்ந்துதாக்குதல்நடத்திவருகின்றன.அதேபோல் உக்ரைனும், ரஷியாபடைகளுக்குதக்கபதிலடி கொடுத்து வருகின்றன. இந்த சூழலில் இந்த போரை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்படபலநாடுகள்முயன்றன.ஆனால்ரஷியாஉக்ரைன்இடையேயான போர் இன்று வரை முடிவுக்கு வரவில்லை. இதற்கிடையே தான் சமீபத்தில் இருநாடுகள் இடையேயான மோதல் சற்று குறைந்திருந்தநிலையில், கடந்த ஒரு மாதமாக மீண்டும் மோதல் வலுத்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம் அமெரிக்கா, இங்கிலாந்து தயாரிப்பு ஏவுகணைகளை பயன்படுத்தி உக்ரைன், ரஷியா மீது தாக்குதல் நடத்தியது தான் காரணம். இதனால் கோபமான ரஷியா, உக்ரைன் மீதும் ஏவுகணை தாக்குதலை தொடங்கியது. இதனால் மோதல் மீண்டும் தீவிரமானது. இதற்கிடையே தான் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வென்ற டொனால்டு டிரம்ப் போரை நிறுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டி வருகிறார்.

அமெரிக்கஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போதே, தான்அமெரிக்கா ஜனாதிபதியாக இருந்திருந்தால் போர் வந்து இருக்காது. இருப்பினும் பதவியேற்ற அடுத்த 24 மணிநேரத்தில் போரை என்னால் நிறுத்த முடியும் என்று அவர் கூறியிருந்தார். மேலும் தேர்தலில் வென்ற பிறகு உக்ரைன், ரஷியாவிடம் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ளதாகவும் டொனால்ட் டிரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ள தயார் என்று ரஷிய அதிபர் புதின் அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.இதன்படிஅமெரிக்கஜனாதிபதியாகதேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு டிரம்புடன் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவும், உக்ரைன் விவகாரத்தில் சமரசம் செய்து கொள்ள தயாராக இருப்பதாகவும், உக்ரைன் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த எந்த நிபந்தனையும் இல்லை என்றும் ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் கூறியதாக ஊடங்கங்களில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரோடு கிழக்கு தொகுதி திமுக கூட்டணி வசமாகும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி

கோவை, டிச.22

கோவையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்செய்தியாளர்கள்சந்திப்பில் கூறியதாவது:

ஈரோடு மாவட்டத்தில் நேற்று கள ஆய்வு நடத்தினேன். கள ஆய்வை பொறுத்தவரையில் இன்னும் வேகமான வகையில் உற்சாகத்தோடு பணியாற்றுவதாக அதிகாரிகள் உறுதி அளித்துள்ளார்கள். 2026 சட்டசபை தேர்தலில் 200 என்ற இலக்கை வைத்திருக்கிறோம். ஆனால் ஈரோட்டில் மேற்கொண்ட கள ஆய்வில் நான் உணர்ந்த உணர்வு என்னவென்றால் 200ஐ தாண்டி விடும் என்று தோன்றுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி திமுக கூட்டணி வசமாகும். ஈரோடு இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றிபெறும். தொகுதியில் யார் போட்டியிட வேண்டும் என்பது குறித்து காங்கிரசுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும். ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை ஒரு கொடுமையான முடிவு; அது ஜனநாயகத்தை படுகுழிக்கு தள்ளக்கூடியது. ராகுல் காந்தி மீது பதியப்பட்டுள்ள வழக்கை அவர் சட்டப்படி சந்திப்பார். இவ்வாறு அவர் கூறினார்.



அதனை தொடர்ந்து நடிகர்கள் அரசியலுக்கு வருவதை எப்படி பாக்குறீங்க? என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு "நடிகர்கள் அரசியல் வருகையை நல்லா பார்க்கிறேன்" என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நகைச்சுவையாக பதில் அளித்தார்.

# தங்க முதலீடு திட்டம்; பழனி கோவிலில் காணிக்கையாக பெறப்பட்ட நகைகள் வங்கியிடம் அமைச்சர் ஒப்படைப்பு

திண்டுக்கல், டிச.22

தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யும் வகையில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் காணிக்கையாக பெறப்பட்ட 192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்கள் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு ள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின் படி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோர்இன்று(20.12.2024) ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஆர்.மாலா முன்னிலையில் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில், காணிக்கையாக வரப்பெற்ற பயன்பாட்டில் இல்லாத 192 கிலோ 984 கிராம் பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி, தங்க முதலீட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்திடும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளரிடம் ஒப்படைத்தனர். இதன் பின்னர் அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது;

'தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் இந்து சமய அறநிலையத்துறையில் திருக்கோவில்களுக்கு திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்குளங்கள் மற்றும் திருத்தேர்களை சீரமைத்தல், திருக்கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற முனைப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



மேலும், திருக்கோவி ல்களின் மேம்பாட்டிற்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களை திரட்டும் வகையில் திருக்கோவில்களுக்கு வரவேண்டிய நிலுவையி லுள்ள வாடகை மற்றும் குத்தகை தொகையினை வசூலித்தல், திருக்கோவி ல்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்களை உருக்கி தங்க முதலீட்டு பத்திரத்தில் முதலீடு செய்து வருவாய் ஈட்டுதல் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திருக்கோவில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களை பிரித்தெடுத்து, பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கிட ஏதுவாக தமிழ்நாட்டை மூன்று மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி துரைசாமி ராஜு, ஓய்வு பெற்ற ஐகோர்ட்டு நீதிபதிகள் ஆர்.மாலா, ரவிச்சந்திரபாபு ஆகியோர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் 23 திருக்கோவில்களில் பயன்பாடற்ற பொன் இனங்களை பிரித்து அதில் 13 திருக்கோவில்களுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன்இனங்கள்உருக்கி,442கிலோ 107 கிராம் எடையுள்ள சுத்த தங்க கட்டிகள் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் ஆண்டு ஒன்றிற்கு ரூ.5.79 கோடி வட்டித் தொகையாக கிடைக்கப் பெற்று அந்தந்த திருக்கோவி ல்களின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கடந்த வாரம் ஆனைமலை, அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோவிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 28 கிலோ 906 கிராமும், திருச்சி மாவட்டம், குணசீலம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்றுப் பொன் இனங்கள் 12 கிலோ 595 கிராமும் மும்பையிலுள்ள மத்திய அரசின் தங்க உருக்காலையில் உருக்கிட பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு காணிக்கையாக வரப்பெற்ற 192 கிலோ 984 கிராம் எடையுள்ள பயன்பாடற்ற பொன் இனங்கள் பாரத ஸ்டேட் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக சுமார் 1,000 கிலோ எடை கொண்ட பலமாற்றுப் பொன் இனங்களைஉருக்கிதங்கமுதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யும் போது ஆண்டிற்கு ரூ.12 கோடி வட்டித் தொகையாக கிடைப்பதோடு, ரூ.700 கோடி மதிப்பிலான தங்க கட்டிகள் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு திருக்கோவில்களில் சொத்து மதிப்பும் உயர்வடைகின்ற அற்புதமான திட்டத்தை செயல்படுத்த உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதல்அமைச்சருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்.' இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி. செந்தில் குமார், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், பழனி சார் ஆட்சியர் எஸ்.கிஷன் குமார், கூடுதல் ஆணையர்கள் சுகுமார், திருமகள், இணை ஆணையர்கள் மங்கயர்க்கரசி, வான்மதி, மாரிமுத்து, கார்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிமன்ற வளாகத்தில் படுகொலை: தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு எங்கே போய்விட்டது? அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, டிச.22

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

திருநெல்வேலி நகரின் மையப் பகுதியில் உள்ள மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் மாயாண்டி என்ற இளைஞர் பட்டப்பகலில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். நீதிமன்ற வளாகத்தில் 20க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களையும் மீறி இந்தப் படுகொலை நடந்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள் வரும் அனைவரும் தீவிர ஆய்வுக்குப் பிறகே அனுமதிக்கப்படுவது வாடிக்கையாக உள்ளது. ஆனால், காவல்துறையின் சோதனையையும் மீறி கொலையாளிகள் ஆயுதங்களுடன் உள்ளே வந்தது எப்படி ? அப்படியானால், காவல்துறையினர்கவனக்குறைவாக இருந்தார்களா? அல்லது கொலையாளிகள் ஆயுதங்களுடன் உள்ளே நுழைவதை காவல்துறையினரே கண்டும் காணாமலும் விட்டுவிட்டார்களா? என்ற ஐயங்கள் எழுகின்றன. இவை அனைத்திற்கும் தமிழக காவல்துறையும், அரசும் விளக்கம் அளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் கடந்த ஒன்றரை மாதங்களில் மருத்துவமனைக்குள் நுழைந்து மருத்துவரை சரமாரியாக வெட்டியது, பள்ளிக்குள் நுழைந்து ஆசிரியையை கொடூரமாக வெட்டி படுகொலை செய்தது, நீதிமன்றத்தி ற்குள் நுழைந்து விசாரணைக்கு வந்தவரை படுகொலை செய்தது என கொடூர நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன. ஒவ்வொரு நிகழ்வின் போதும் முன்பகை காரணமாகவே இத்தகைய நிகழ்வுகள் நடப்பதாகக் கூறி காவல்துறையின் தோல்வியை நியாயப்படுத்தும் வகையில்தான் தமிழக அரசு பதிலளிக்கிறதே தவிர, சட்டம் ஒழுங்கை மேம்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காவல்துறையின் அலட்சிய அணுகுமுறை கண்டிக்கத்தக்கது.

நெல்லை நீதிமன்ற வளாகத்தில் விசாரணைக்கு வந்தவரை கொலை செய்தவர்களை கைது செய்துவிட்டோம் என்று காவல்துறை கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. காவல்துறையினர் முன்னிலையில் படுகொலை நடைபெற்றிருக்கிறது. அதைத் தடுக்க தவறிய காவல்துறையினர், கொலை நடந்த பிறகு கொலையாளியைப் பிடிப்பது ஒன்றும் சாதனையல்ல. கொலையைத் தடுக்கத் தவறியது காவல்துறையின் படுதோல்வி. அதற்கு தமிழக அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முன் கடலூரில் கடை ஒன்றில் வணிகம் செய்து கொண்டிருந்த அதன் உரிமையாளர் கழுத்தை அறுத்து படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், அதற்குக் காரணமானவர்கள் யார் என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் படுகொலை செய்யப்பட்டு, 15 நாட்களுக்கு மேலாகிவிட்டன. ஆனால், அந்த வழக்கிலும் இதுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு என்பது இல்லாமலேயே போய்விட்டது. அது எங்கு போயிருக்கிறது ? என்பதுதான் தெரியவில்லை.

ஒரு மாநிலத்தில் அமைதியும், சட்டம் ஒழுங்கும் நிலவாவிட்டால், அங்கு மக்களால் வாழ முடியாது. சட்டம் ஒழுங்கை கட்டுப்படுத்த முடியாத தமிழக ஆட்சியாளர்கள், தமிழ்நாட்டில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்ற மாய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதில் இருந்து வெளியே வந்து தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும், மக்கள் அச்சமின்றி நடமாடவும் வகை செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 500 கனஅடியாக குறைப்பு

சேலம், டிச.22

மேட்டூர் அணைக்கு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தண்ணீர் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. மேலும் டெல்டா மாவட்டங்களிலும் மழை பெய்து வந்ததால் அங்கு தண்ணீர் தேவையும் குறைந்து காணப்பட்டது. இதையடுத்து மேட்டூர் அணையில்இருந்துகடந்த சிலநாட்களாகவினாடிக்கு 1000 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. அணைக்கு வரும் தண்ணீரை விட குறைந்த அளவிலேயே பாசனத்துக்கு



தண்ணீர் திறக்கப்பட்டதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 119.12 அடியாக இருந்தது. அணைக்கு நேற்று 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது இன்று 2938 கனஅடியாக குறைந்து காணப்பட்டது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு வினாடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டது. மேலும் கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 300 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் தற்போது 92.07 டி.எம்.சி.தண்ணீர்இருப்பு உள்ளது.

# இன்று திமுக தலைமை செயற்குழு கூட்டம்

சென்னை, டிச.22

தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுஒத்திவைக்கப்பட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்தலைமை




யில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் கலைஞர் அரங்கில் நடைபெறும்.

இதில் உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்த கூட்டத்தில் சுமார் 400 பேர் பங்கேற்க உள்ளனர். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# நெல்லை கொலை சம்பவம்: 'சகோதரனின் கொலைக்கு பழிக்குப்பழியாக உறவினர்களுடன் சேர்ந்து கொன்றேன்' வாலிபர் வாக்குமூலம்

நெல்லை, டிச.22

நெல்லை பாளையங்கோட்டை கீழநத்தம் மேலூர் பகுதியை சேர்ந்தவர் சண்முகம். இவரது மகன்கள் மாரிசெல்வம்(25), மாயாண்டி என்ற பல்ல மாயாண்டி(23).

மாயாண்டி கொலை முயற்சி வழக்கு தொடர்பாக மாயாண்டி கோர்ட்டில் ஆஜராவதற்காக தனது சகோதரர் மாரி செல்வத்துடன்நேற்றுநெல்லை மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்திருந்தார். அப்போது நீதிமன்றம் முன்பு வைத்து அவரை ஒரு கும்பல் சரமாரியாக வெட்டிக்கொலை செய்து விட்டு காரில் தப்பிச்சென்றது.

அப்போது அதில் ஒருவரை போலீசாரும், வக்கீல்களும் சேர்ந்து பிடித்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில், அவர் கீழநத்தம்இந்திராகாலனியை சேர்ந்த ராமகிருஷ்ணன்(25) என்பதும், கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் 13ந்தேதி கீழநத்தம் வடக்கூரை சேர்ந்த கீழநத்தம் 2வது வார்டு உறுப்பினர் ராஜாமணி கொலை செய்யப்பட்டதற்கு பழிக்குப்பழியாக மாயாண்டியை, ராஜாமணியன், மனோராஜ் மற்றும் அவரது உறவினர்கள், நண்பர்கள் என 7 பேர் கும்பல் தீர்த்துக்கட்டியது தெரிய வந்தது.

இதையடுத்து போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி கீழநத்தம் வடக்கூரை சேர்ந்த தங்கமகேஷ்(21), மனோராஜ்(27), சிவா(19), முத்துக்கிருஷ்ணன்(26), கண்ணன்(22), அனவரத நல்லூரை சேர்ந்த மற்றொரு கண்ணன்(20) ஆகிய 7 பேரைகைது செய்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் மனோராஜ் வாக்குமூலமாக கூறியதாவது:

எனது சகோதரன் ராஜாமணியை எவ்வித காரணமும் இன்றி மாயாண்டி வெட்டிக் கொலை செய்தார். இதனால் எனது குடும்பத்தினர் மிகுந்த துயரம் அடைந்தனர். இதனை



பார்த்து எனக்கு ஆத்திரம் ஏற்பட்டது. எப்படியாவது மாயாண்டியை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று முடிவு செய்தேன். தொடர்ந்து அவரது நடமாட்டத்தை கண்காணித்து வந்த நிலையில், அவர் கோவையில் இருந்து வழக்கு விசாரணைக்காக நேற்று கோர்ட்டுக்கு வருவதை அறிந்தேன்.

இதனால் எனது நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் சேர்ந்து காரில் கோர்ட்டு எதிரே காத்திருந்தேன். அப்போது அவர் ஓட்டலுக்கு சென்றுவிட்டு நீதிமன்ற நுழைவு வாயிலை நோக்கி சென்றார். உடனே அவரைசுற்றி வளைத்து கொலை செய்து விட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே இந்த கொலை சம்பவத்தில் உண்மை குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்ய வேண்டும், மாயாண்டி குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கையை வலியுறுத்தி மாயாண்டி உடலை வாங்க அவரது உறவினர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். அவர்களிடம் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.


கொலை சம்பவத்தால் கீழநத்தம் பகுதி முழுவதும் பதற்றம் நிலவுகிறது. இதனால் கீழநத்தம் மேலூர், வடக்கூர், தெற்கூர் ஆகிய 3 இடங்களிலும் சுமார் 200 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தந்தை இறந்ததை மறைத்து 2 ஆண்டுகளாக பென்சன் ரூ.8.50 லட்சத்தை மோசடியாக எடுத்த இன்ஸ்பெக்டர் மகன் கைது

ராமநாதபுரம்,டிச.22

ராமநாதபுரம் மாவட்டம் ராமநாதபுரம் நகர் குட்செட் தெரு அண்ணாநகர் பகுதியை சேர்ந்தவர்ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம். பென்சன் பெற்று வந்த இவர் கடந்த 3.6.2020 அன்று இறந்து விட்டார்.

இந்த நிலையில் இவரது மகன் சரவணபாபு (வயது41) தனது தந்தை இறந்ததை மாவட்ட கருவூல அலுவலரிடம் தெரியப்படுத்தாமல் 2020ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை 28 மாதங்கள் மொத்தம் ரூ.8 லட்சத்து 84 ஆயிரத்து 774ஐ அவரது பென்சன் தொகையை ஏ.டி.எம். மூலம் எடுத்து வந்துள்



ளார்.

இது கருவூல அலுவலருக்கு தெரிய வந்ததையடுத்து சரவணபாபுவை நேரில் அழைத்து மோசடியாக எடுத்த பணத்தை கருவூலத்தில் திருப்பி ஒப்படைக்கு மாறு எச்சரித்துள்ளார். அதனைத் தொடர்ந்து 2023ம் ஆண்டு ரூ.30 ஆயிரம் மட்டும் திரும்ப செலுத்தி விட்டு தலைமறைவாகி விட்டார்.

ராமநாதபுரம் மாவட்ட கருவூல அலுவலர் சேசன் இதுதொடர்பாக போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷிடம் புகார் அளித்தார். உடனடியாக உதவி போலீஸ் சூப்பிரண்டு சிவராமன் உத்தரவின் பேரில் தலைமறைவான சரவணபாபுவை பிடிக்க பி.1 போலீஸ் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது.

தலைமறைவான சரவணபாபுவை தனிப்படை போலீசார் தீவிரமாக தேடி வந்த நிலையில் நேற்று அண்ணா நகரில் உள்ள அவரது வீட்டின் அருகே தனிப்படை போலீசாரால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அவரிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணையில் தந்தையின் பென்சன் பணத்தை கையாடல் செய்ததை சரவணபாபு ஒப்புக் கொண்டதை தொடர்ந்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டரின் மகன் தனது தந்தை இறந்ததை மறைத்து பென்சன் பணத்தை கையாடல் செய்தது ராமநாதபுரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வத்தலக்குண்டு சேவுகம்பட்டி பேரூராட்சி மன்ற கூட்டம்

வத்தலகுண்டு,டிச.22

வத்தலகுண்டு அருகே சேவகம்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர கூட்டம் பேரூராட்சி மன்ற தலைவர் வனிதாதங்கராஜன் தலைமையில் துணைத் தலைவர் தெய்வராணி விஜயன் முன்னிலையில் நடைபெற்றது.

பேரூராட்சி செயல் அலுவலர் ரமேஷ்பாபு வரவேற்றார். இக்கூட்டத்தில் 15 வது நிதி ஆணைய



நிபந்தனை மானிய திட்டத்தின் கீழ் 3வது வார்டு தீனவேல் நகரில் ரூ.9 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் விநியோக பைப் லைன் அமைத்தல், வளம் மீட்பு பூங்கா 3ல் காவலர் அறை மற்றும் கழிப்பறை அமைத்தல், 15 வது நிதி ஆணைய நிபந்தனையற்ற மானிய திட்டத்தின் கீழ் ரூ. 12 லட்சம் மதிப்பீட்டில் 3வது வார்டில் மயானத்தில் புதிய எரியூட்டும் மேடை, காத்திருப்போர் அறை மற்றும் சுற்றுச்சுவர் பாராமரிப்பு பணி செய்தல் உள்ளிட்ட 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் இளநிலை உதவியாளர் அம்மமுத்து நன்றி கூறினார்.

# விழுப்புரத்தில் மழை நிவாரணம் கேட்டு அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டம்: சி.வி.சண்முகம் எம்.பி. பங்கேற்பு

விழுப்புரம், டிச.22

மழை நிவாரணம் கேட்டு விழுப்புரத்தில் அ.தி.மு.க.வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த அனைத்து குடும்பங்களுக்கும், மழையால் சேதமடைந்த அனைத்து வீடுகளுக்கும், சேதமடைந்த பயிர்களுக்கும் உரிய நிவாரணம் உடனடியாக வழங்க வலியுறுத்தியும்

விழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்து இருந்தார்.

அதன்படி இன்று விழுப்புரம் கலெக்டர் அலுவல



கம் அருகே உள்ள நகராட்சி திடலில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு விழுப்புரம் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், எம்.பி.யுமான சி.வி. சண்முகம் தலைமை தாங்கினார்.

முன்னாள் மத்திய மந்திரி செஞ்சி ராமச்சந்திரன், சி.வி. ராதாகிருஷ்ணன், எம்.எல்.ஏ.க்கள் அர்ச்சுனன், சக்கரபாணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. முத்தமிழ் செல்வன்,அண்ணா தொழிற்சங்க செயலாளர் அற்புதவேல், மாவட்ட மருத்துவரணி டாக்டர் முத்தையன், மாவட்ட மாணவரணி செயலாளர் சக்திவேல், தொழில் நுட்ப பிரிவு தலைவர் வக்கீல் பிரபாகரன், ஜெயலலிதா பேரவை துணை செயலாளர் பாலாஜி, நகர செயலாளர்கள் பசுபதி, வண்டிமேடு ராமதாஸ், ஒன்றிய செயலாளர்கள் முகுந்தன், பன்னீர், சுரேஷ் பாபு, பேட்டை முருகன், நகர துணை செயலாளர் வக்கீல் செந்தில், கவுன்சிலர்கள் ராதிகா செந்தில், கோதண்டனர், திண்டிவனம் நகர செயலாளர் தீனதயாளன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மழை நிவாரணம் வழங்க கோரி கோஷங்கள் எழுப்பினார்கள்.

# திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள்: மாவட்ட கலெக்டர் வழங்கினார்

திருநெல்வேலி, டிச.22

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் கா.ப.கார்த்திகேயன், விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, விவசாயிகளுடன் கலந்துரையாடினார்கள்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பு டிசம்பர் மாதத்தில் 17.12.2024 ம் தேதி வரை 290.10 மி.மீ மழை பெய்துள்ளது. இது டிசம்பர் மாத வளமையான மழையளவான 116.60 மி.மீ விட 148% கூடுதலாகும். சென்ற நவம்பர் 2024 ல் 177.70 மி.மீ மழை பெய்துள்ளது. இது வளமையான மழையளவான 208.20 மி.மீ ஐ விட 14.64 சதவிகிதம் குறைவாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பாண்டு இதுவரை 56313 ஹெக்டேர் பரப்பில் வேளாண் மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டை ஒப்பிடும் பொழுது நடப்பாண்டு 11827 ஹெக்டேர் சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இவற்றில் சிறுதானியங்கள்




24%, எண்ணெய் வித்துப் பயிர்கள் 160%, பயறு வகைகள் 10%, பழவகைகள் 23% மற்றும் மற்றும் காய்கறிப்பயிர்கள் 21% அதிகரித்துள்ளது.

மாவட்டத்தில் நடப்பு வடகிழக்கு பருவத்தில் 12.12.2024 முதல் 14.12.2024 வரை பெய்த கனமழையின் காரணமாக 410.50 எக்டேர் பரப்பில் நெல்பயிரும், 5170 எக்டேர் பரப்பில் உளுந்து மற்றும் பயறுவகை பயிரும், வாழை 141.7 எக்டேரிலும், 25 எக்டேர் பரப்பில் மக்காசோளப் பயிரும், 1.8 எக்டேர் பரப்பில் எள்பயிரும், 0.48 எக்டேர் பரப்பில் கரும்பு பயிரும் சிறுகிழங்கு 14.0 எக்டேரிலும், சேனை கிழங்கு 3.49 எக்டேரிலும், சேப்பங்கிழங்கு 3.77 எக்டேரிலும், இதர தோட்டக்கலைப் பயிர்கள் எக்டேரிலும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது என முதற்கட்ட ஆய்வில் தெரியவருகிறது. பயிர் சேத விபரங்கள் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறையினரால் கூட்டுபுல தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. சேத விபர அறிக்கை விரைவில் அரசுக்கு அனுப்பப்பட்டு உரிய நிவாரணம் கிடைக்க வழிவகை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தவிர பயிர் காப்பீட்டுத்தொகை விரைந்து பெற்று வழங்கிடும் பொருட்டு உடனடியாக பயிர் அறுவடை பரிசோதனைகளை முடிக்கவும் பயிர்காப்பீட்டு நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வடகிழக்கு பருவமழையின் போது டிசம்பர் மாதம் 17 மற்றும் 18 ஆகிய நாட்களில் பெய்த அதீத கனமழையில் பாதிக்கப்பட்ட 7588.69 ஹெக்டேர் வேளாண் பயிர்களுக்கு 8.93 கோடியும், 389.39 ஹெக்டேர் தோட்டக்கலைப் பயிர்களுக்கு 0.686 கோடியும் பயிர்சேத நிவாரணத்தொகையாக அரசிடம் இருந்து பெற்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தினால் பயிர் பாதிப்பு ஏற்பட்டால் அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது மாவட்ட வெள்ள கட்டுப்பாட்டு அறையினையோ 0462 2572514 என்ற எண் மூலமாகவும், பயிர் காப்பீடு தொடர்பான புகார்களுக்கு 14447, 7358150560 அல்லது 9944369649 என்ற எண்ணையும் தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நவம்பர் 2024 ம் மாதத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் 104 மனுக்கள் பெறப்பட்டது. அவற்றுள் வேளாண்மை சார்ந்த மனுக்கள் 58 எண்களும், வேளாண்மை சாராத மனுக்கள் 46 எண்களும் பெறப்பட்டு, மனுக்களுக்குரிய பதில்கள் சம்மந்தப்பட்ட துறை மூலம் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்கள்.

# தொடர்ந்து நடந்த வருமான வரித்துறை சோதனை நிறைவு

ஒட்டன்சத்திரம், டிச.22

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகில் உள்ள சத்திரப்பட்டியை சேர்ந்தவர் செந்தில்குமார் (வயது 49). இவர் தமிழகம் மட்டுமின்றி பல்வேறு மாநிலங்களிலும் மிகப் பெரிய அளவில் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். மேலும் செங்கல் சூளைகளுக்கான செம்மண் விற்பனையிலும் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் கடந்த 18 ந் தேதி காலை மதுரையை சேர்ந்த வருமானவரித் துறை அதிகாரிகள் 15 பேர் 6 கார்களில் செந்தில்குமார் வீட்டில் சோதனை நடத்துவதற்காக வந்தனர். வீட்டின் பிரதான நுழைவு வாயிலை பூட்டிய அதிகாரிகள் வீட்டில் இருந்தவர்கள் வெளியேறவும், உள்ளே நுழையும் வெளி நபர்களையும் சோதனையிட்டனர்.

இந்த வீட்டின் அருகில் இருந்த அலுவலகம், விருந்தினர் ஓய்வு இல்லம் ஆகியவற்றிலும் சோதனை நடத்தப்பட்டது. சோதனையின்போது செந்தில்குமார் மற்றும் அவரது மனைவி கனியாவதி ஆகிய குடும்பத்தினர்



மட்டும் வீட்டில் இருந்தனர்.

கடந்த 4 நாட்களாக நடந்த சோதனை இன்று அதிகாலை நிறைவு பெற்றது. சோதனையின் போது செந்தில் குமாரின் பங்களா அருகில் ஒரு பாழடைந்த வீடு இருந்தது குறித்து அதிகாரிகள் கேட்டனர். அதில் பழைய பொருட்கள் இருப்பதாக அவர் கூறினார். அந்த அறையின் சாவியை கேட்டபோது, அது தொலைந்து போய் விட்டதாக தெரிவித்தார். இதனால் கடப்பாறையை எடுத்து வரச்சொல்லி அந்த அறையை உடைத்து பார்த்தனர். அப்போது அந்த வீட்டுக்குள் சொத்து தொடர்பாக முக்கிய ஆவணங்கள் இருந்தது தெரிய வந்தது. மேலும் கணக்கில் வராத நகைகள் மற்றும் கட்டு கட்டாக பணம் இருந்தது தெரிய வரவே அதனையும் கைப்பற்றினர்.

செந்தில்குமாரின் உறவினர்களான குழந்தைவேல் மற்றும் இவரது தம்பி முருகன் ஆகியோர் ஒட்டன்சத்திரம்தாராபுரம் சாலையில் நகைக்கடை வைத்து நடத்தி வருகின்றனர். ஒட்டன்சத்திரம்பழனி சாலையில் இவர்களுக்கு சொந்தமானபெட்ரோல்பங்க்கும் இயங்கி வருகிறது. இந்நிலையில் செந்தில்குமாரின் வீட்டில் சோதனை நடத்தப்பட்ட அதே நேரத்தில் குழந்தைவேல், முருகன் ஆகியோருக்கு சொந்தமான நகைக்கடை, பெட்ரோல் பங்க் ஆகிய இடங்களிலும் வருமான வரித்துறையால் சோதனை நடத்தப்பட்டது.

இந்த சோதனையில் 6 பேர் கொண்ட குழுவினர் ஈடுபட்டனர். குழந்தைவேல் கடந்த சில தினங்களுக்கு முன்பு உடுமலைப்பேட்டை ரோட்டில் 4 ஏக்கர் பரப்பளவில் புதியவீட்டுமனைஒன்றை உருவாக்கினார். இதற்காக 1000கிடாய்களைவெட்டி மாபெரும் விருந்து வழங்கப்பட்டது. அப்போது இருந்தே இவருக்கு போட்டியாக தொழில் நடத்தி வருபவர்கள் இவர் மீது அதிகாரிகளிடம் புகார் அளித்தனர். அதன் பேரில் தான் இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

இது தவிர பைனான்ஸ் அதிபர் செந்தில்குமார் பா.ஜ.க. மாநில நிர்வாகிக்கு நெருக்கமானவர். இதனால் அரசியல் காரணங்களுக்காக இந்த சோதனை நடத்தப்படுவதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 4 நாட்களாக ஒட்டன்சத்திரம் மற்றும் சத்திரப்பட்டியில் நடந்த வருமானவரித்துறைசோதனை முடிவுக்கு வந்துள்ளதால் அதன் பிறகு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்த பரபரப்பு அதிகரித்துள்ளது.

# திமுகவை 2026 ல் வீட்டுக்கு அனுப்புவதே புண்ணியம்: தமிழிசை சவுந்தரராஜன்



சென்னை, டிச.22

தமிழக பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

விஞ்ஞானபூர்வமாக ஊழல் பட்டம் பெற்றவர்கள் திமுகவினர். சர்க்காரியா கமிஷன் அமைத்து ஊழலுக்காக, கலைக்கப்பட்ட ஒரே ஆட்சி, திமுக ஆட்சிதான். திமுக தனது ஆட்சியை காப்பாற்றிக் கொள்ள, காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கச்சத்தீவை இலங்கையிடம் தாரை வார்த்து மீனவர்களின் வாழ்வாதாரத்தை கெடுத்து பாவங்களை சேர்த்துக் கொண்டது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயத்தால் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததால், அவர்களது குடும்பத்தினரின் பாவத்தையும் திமுக சேர்த்துள்ளது.

வேங்கைவயலில் மனித கழிவு கலந்த தண்ணீரை ஊர் மக்கள் குடித்து பெரும் இன்னலுக்கு ஆளான நிலையில், இன்றளவும் யார் அதை செய்தது என்று கண்டுபிடிக்க முடியாமல் ஊர் மக்களின் பாவத்தை வாங்கிக் கொண்டதும் திமுகதான்.

இப்படி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் அம்பேத்கர் பற்றி திமுக பேசுவது நியாயமா ?. 'சென்னையில் ரூ.4,000 கோடியில் மழைநீர் வடிகால்கள் அமைத்து விட்டோம்' என்று கூறிக்கொள்ளும் திமுக, மழைக்காலங்களில் தண்ணீரில் தத்தளிக்கும் மக்களின் பாவங்களையும் வாங்கிக் கொண்டது. ஊழல் செய்வதையே குடும்ப தொழிலாக்கி, ஏழை, எளிய மக்களின் பாவங்களை சேர்த்த, நிர்வாக திறனற்ற திமுகவை 2026 ல் வீட்டுக்கு அனுப்புவதே தமிழக மக்களுக்கு புண்ணியம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தளவானூர் அணைக்கட்டில் இருந்து வீணாக கடலில் கலக்கும் தண்ணீர்: விவசாயிகள் வேதனை



சென்னை, டிச.22

பெஞ்சல் புயலின் காரணமாக திருவண்ணாமலை மாவட்டத்தில் பெய்த தொடர் கனமழையினால் அங்குள்ள சாத்தனூர் அணை அதன் முழு கொள்ளளவை எட்டியது. இதனால் அணையில் இருந்து உபரிநீர், தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்பட்டது. இதன் காரணமாக கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர், மணலூர்பேட்டை பகுதிகளில் உள்ள தென்பெண்ணையாற்றை கடந்து விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள எல்லீஸ்சத்திரம், தளவானூர் ஆகிய தென்பெண்ணையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஆற்றின் இருபுறங்களிலும் தண்ணீர் கரைபுரண்டு ஓடியது.

தற்போதும் ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகமாக உள்ளதால் ஆற்றை யாரும் கடக்க வேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆற்றுப்பகுதிகளில் சிறுவர், சிறுமிகள், இளைஞர்கள் செல்வதை தடுக்கவும், குளிப்பதை தடுக்கும் வகையிலும் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

மேலும் தளவானூர் அணைக்கட்டு கடந்த 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 23ந் தேதி உடைந்து சேதமடைந்ததோடு 3 ஷட்டர்களும் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன. அணைக்கட்டு உடைந்து 4 ஆண்டுகள் ஆகியும் இதுநாள் வரையிலும் புதிய அணை கட்டப்படவில்லை. இதனால் கடந்த ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டும், தளவானூர் தென்பெண்ணையாற்றுக்கு வரும் தண்ணீர் அப்படியே வீணாக கடலில் சென்று கலந்து வருகிறது.

ஏற்கனவே எல்லீஸ்சத்திரத்தில் உள்ள அணைக்கட்டு உடைந்த நிலையில் அங்கு புதிய அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளதால் தண்ணீர் தேங்கியுள்ளது. இருந்தபோதிலும் அந்த அணைக்கட்டில் இருந்து நிரம்பி வழியும் தண்ணீரை தளவானூரில் சேமித்து வைக்க முடியாத நிலை உள்ளது. தளவானூரில் இன்னும் புதிய அணைக்கட்டு கட்டப்படாததால் தென்பெண்ணையாற்றில் ஓடும் தண்ணீர் முழுவதையும் சேமித்து வைக்க முடியாமல் அப்படியே வீணாக கடலில் சென்று கலந்து வருகிறது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மிகவும் வேதனையடைந்துள்ளனர். அடுத்த பருவமழை காலத்திற்குள் தளவானூரில் புதிய அணைக்கட்டை அரசு விரைந்து கட்டி முடித்து தண்ணீரை சேமித்து வைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இரட்டை இலை விவகாரம்: தேர்தல் ஆணையத்திற்கு அவகாசம் வழங்க சென்னை ஐகோர்ட்டு மறுப்பு



சென்னை, டிச.22

சென்னை ஐகோர்ட்டில், திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், அ.தி.மு.க.வின் உள்கட்சி விவகாரம் தொடர்பாகவும், கட்சியின் சட்டத்திட்டங்களுக்கு விரோதமாக செயல்பட்டது தொடர்பாகவும் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கடந்த 2017ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டு வரை பல புகார்களை அனுப்பியுள்ளேன்.

அ.தி.மு.க., உள்கட்சி தொடர்பாகசிவில் கோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளன. அந்த வழக்குகள் முடிவுக்கு வரும் வரை இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க,வுக்கு ஒதுக்கக்கூடாது என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு மனு அனுப்பினேன். இந்த மனுவை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் முன்பு கடந்த 4ம் தேதி விசாரணைக்கு வந்தது. அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான வக்கீல் நிரஞ்சன்ராஜகோபால், மனுதாரரின் மனு தொடர்பாக அ.தி.மு.க.வுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அ.தி.மு.க.வும் பதில் அளித்துள்ளது. இதன்படி, மனுதாரர் மனு விரைவில் முடிவு எடுக்கப்படும்'' என்று கூறினர்.

ஓ.பன்னீர்செல்வம் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அரவிந்த் பாண்டியன், வக்கீல் சி.திருமாறன் ஆகியோர் ஆஜராகி, "இந்த விவகாரத்தில் ஓ.பன்னீர்செல்வம் தரப்பின் கருத்தை தேர்தல் ஆணையம் இதுவரை கேட்கவில்லை. எனவே, ஓ.பன்னீர்செல்வம் தரப்பின் கருத்தை கேட்ட பிறகே முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்'' என்று வாதிட்டனர்.

இதையடுத்து நீதிபதிகள், "மனுதாரரின் மனு மீது இந்திய தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தும்போது, இந்த வழக்கில் எதிர்மனுதாரர்கள் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரது கருத்துக்களை கேட்டு, 4 வாரத்துக்குள் இந்திய தேர்தல் ஆணையம் தகுந்த முடிவை எடுக்க வேண்டும். இந்த வழக்கை முடித்து வைக்கிறோம்'' என்று உத்தரவிட்டனர்.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பாக கடந்த மார்ச் மாதம் எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த பதில் தனக்கு வழங்கப்படாத நிலையில், தனது கருத்துக்களை தெரிவிக்க முடியவில்லை என்பதால், தனது மனுவை பரிசீலித்து முடிவெடுக்க தேர்தல் ஆணையத்துக்கு மேலும் எட்டு வார கால அவகாசம் வழங்கக் கோரி சூரிய மூர்த்தி தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை இன்று விசாரித்த நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியம் மற்றும் சி.குமரப்பன் அமர்வு, தேர்தல் ஆணையம் நான்கு வாரத்தில் மனு மீது முடிவெடுக்கும் என தெரிவித்ததாகவும், நீதிமன்றம் எந்த காலக்கெடுவும் நிர்ணயிக்கவில்லை என்றும் கூறி, மனு மீது முடிவெடுக்க கூடுதல் அவகாசம் வழங்க மறுப்பு தெரிவித்து, சூரியமூர்த்தியின் மனுவைதள்ளுபடிசெய்து உத்தரவிட்டது.

# 15 வயது சிறுமியை பலாத்காரம் செய்து கொன்ற வாலிபருக்கு இரட்டை ஆயுள் தண்டனை



மயிலாடுதுறை, டிச.22

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகா திருவெண்காடு அருகே சித்தன் காத்திருப்பு பகுதியை சேர்ந்த கலியமூர்த்தி மகன் கல்யாணசுந்தரம் என்கிற வைரவேல். இவர், கடந்த 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ந் தேதி 10ம் வகுப்பு படித்த 15 வயது சிறுமியை பலாத்காரம் செய்துள்ளார்.

இதனால் காயமடைந்த சிறுமி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபமாக இறந்தார். இந்த கொலை சம்பவம் தொடர்பாக திருவெண்காடு போலீசார் போக்சோமற்றும்கொலை வழக்குப்பதிவு செய்து வைரவேலை கைது செய்தனர். இந்த வழக்கு மயிலாடுதுறை மாவட்ட முதன்மை அமர்வு கோர்ட்டில் நடந்து வந்தது.

விசாரணைக்கு வந்த இந்த வழக்கில் சிறுமியை கொலை செய்த வைரவேலுக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், ரூ.4 ஆயிரம் அபராத தொகையும் விதித்து மாவட்ட அமர்வு நீதிபதி விஜயகுமாரி தீர்ப்பு வழங்கினார். இதனையடுத்து போலீசார் வைரவேலை கைது செய்து திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

# அடுக்குமாடி குடியிருப்பில் விபசாரம்: 4 பேர் கைது, 6 பேர் மீட்பு

வேலூர், டிச.22

வேலூர் சத்துவாச்சாரி நேருநகரில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் விபசாரம் நடப்பதாக சத்துவாச்சாரி போலீசாருக்கு ரகசிய தகவல் வந்தது. அதன் பேரில் இன்ஸ்பெக்டர்லதாதலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அதிரடியாக சோதனை நடத்தினர்.

அப்போது அடுக்குமாடி குடியிருப்பில் விபசாரம் நடப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து விபசாரத்தில் ஈடுபட்டதாக அடுக்கம்பாறையை சேர்ந்த நிருபன் விஜய், ஆந்திர மாநிலம் சித்தூர் பகுதியைச் சேர்ந்த மணிகண்டன், வேலூர் கொணவட்டத்தைசேர்ந்தஅனீஸ், திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை சேர்ந்த கவுதம் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். மேலும் தலைமறைவான விஜயகுமார் என்பவரை போலீசார் தேடி வருகின்றனர். தொடர்ந்து அங்கு 6 இளம்பெண்களை போலீசார் மீட்டனர். விசாரணையில் அவர்கள் ஆந்திரா, சென்னை, திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்டவர்கள் என்பது தெரியவந்தது. அவர்களை காப்பகத்தில் போலீசார் ஒப்படைத்தனர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்தனர். இந்த சம்பவம் வேலூர் மாவட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# துவரம் பருப்பு மற்றும் பாமாயில் கொள்முதலில் முறைகேடு; தி.மு.க. அரசுக்கு ஓ.பன்னீர் செல்வம் கண்டனம்



சென்னை, டிச.22

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தி.மு.க. ஆட்சி என்றாலே ஊழல் தலைவிரித்து ஆடும் என்பதற்கேற்ப, ஊழல், கமிஷன், வசூல் . இப்பொழுது அதைத்தான் மேற்கொண்டு வருகிறது. 2022 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையைமுன்னிட்டு பிற மாநிலங்களில் உள்ள நிறுவனங்களிடமிருந்து தாமற்ற பொருட்களை கொள்முதல் செய்து அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் விநியோகித்து மக்களின் பணத்தை வீனடித்ததே ஊழலுக்கு சிறந்த உதாரணம். அந்த வரிசையில், தற்போது தரமற்ற நிறுவனங்களிடமிருந்து நியாய விலைக் கடைகளுக்கான துவரம் பருப்பு மற்றும் பாமாயில்போன்றவற்றை கொள்முதல் செய்ய தி.மு.க அரசு ஆணை பிறப்பித்துள்ளதாக தகவல் வந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள நியாயவிலைக் கடைகளுக்கு 60,000 டன்துவரம் பருப்பு மற்றும் ஆறு கோடி லிட்டர் பாமாயில் விநியோகிப்பதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஒப்பந்தப்புள்ளி கோரியதாகவும், இதில் கலந்து கொண்ட நிறுவனங்களில், துவரம் பருப்புக்கு மாதிரி வழங்கிய ஆறு நிறுவனங்கள் மற்றும் பாமாயிலுக்கு மாதிரி வழங்கிய மூன்று நிறுவனங்கள், ஆக மொத்தம் ஒன்பது நிறுவனங்களின் பொருட்கள் தரமற்றவை என ஆய்வு அறிக்கை தெரிவித்த நிலையில், மேல் மட்டத்திலிருந்து வந்த நெருக்கடி காரணமாக நிராகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மாதிரிகள்மீண்டும்ஆய்வுசெய்ய பரிந்துரைக்கப்பட்டு தரமானவை என்று பரிந்துரைக்க நிர்பந்திக்கப்பட்டகவும் செய்திகள் வருகின்றன.

இதன் பின்னர், ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்பட்டு, துவரம் பருப்புக்கான கொள்முதல் ஆணை நான்கு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதாகவும், அவற்றில் இரு நிறுவனங்களின் மாதிரி முநல் முறை தா பரிசோதனையில் தேர்வாகவில்லை என்றும். இதே போன்று பாமாயிலுக்கான கொள்முதல் ஆணை நான்கு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அந்த நிறுவனங்களுக்கும் தர பரிசோதனையில் விதிகளை மீறி சலுகை அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. தரப் பரிசோதனையில் தேர்வாகாத நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு அவற்றை மக்களுக்கு விநியோகித்தால் அவை மக்களுக்கு கேடு விளைவிக்கும் என்பதைக் கூட பொருட்படுத்தாமல், அந்த நிறுவனங்களிடமிருந்து பொருட்களை கொள்முதல் செய்வது என்பது ஊழலின் ஒலின் உச்சகட்டம். ஆதாயம் கிடைத்தால் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பது கடும் கண்டனத்திற்குரியது.

முதல்அமைச்சர், இதில் தனிக் கவனம் செலுத்தி, தரமில்லாத பொருட்கள் கொள்முதல் செய்யப்படுவதை தடுத்து நிறுத்தவும் , மக்களுக்கு தரமான பொருட்களை விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க தரமான வேண்டுமென கேட்டுக் கொன்கிறேன். என தெரிவித்துள்ளார் .

# தமிழகத்தில் வாய்க்கால் இல்லாத பாலம் கட்டப்பட்டு உள்ளதா? அரசு விளக்கம்



சென்னை, டிச.22

தமிழகத்தில் வாய்க்கால் இல்லாமல் பாலம் கட்டப்பட்டு உள்ளதாக சமூக வலைத்தளங்களில் புகைப்படம் ஒன்று வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்த புகைப்படத்தை 'டேக்' செய்து பலரும் தமிழக அரசை வசைபாடியுள்ளனர்.

இதையடுத்து இந்த புகைப்படங்கள் தொடர்பாக தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் கள ஆய்வில் இறங்கியது. அதில் புகைப்படங்களில் உள்ள வாய்க்கால் இல்லாத பாலம் தென் ஆப்பிரிக்காவில் இருப்பது தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் தனது பதிவில், "வாய்க்கால் இல்லாமல் பாலம் கட்டப்பட்டுள்ள புகைப்படங்கள் தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டதாக பரவிய தகவல் முற்றிலும் பொய்யானது. இது தமிழ்நாட்டில் நடந்தது அல்ல. தென் ஆப்பிரிக்காவின் கியானி நகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்ட பணியை தமிழ்நாடு என்று திரித்து வதந்தி பரப்பி வருகிறார்கள். இந்தபுகைப்படங்கள் கடந்த 7ந்தேதியன்று கியானி நகராட்சியின் அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் பகிரப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

# மதுரை விமான நிலையத்தில் இரவு நேர விமான சேவை

மதுரை, டிச.22

மதுரை விமான நிலையத்தில் இருந்து சென்னை, பெங்களூரு, மும்பை, டெல்லி, ஐதராபாத் உள்ளிட்ட உள்நாட்டு நகரங்களுக்கும், இலங்கை, துபாய், சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கும் விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, மதுரை விமான நிலையத்தில், காலை 8.10 மணி முதல் இரவு 9.05 மணி வரை விமானங்கள் இயக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில், மதுரை விமான நிலையம் 24 மணி நேரமும் செயல்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அவ்வாறு இயங்காமல் பகல் நேரங்களில் மட்டுமே விமான சேவை இருந்து வந்தது. இதனால், மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றி, 24 மணி நேரமும் செயல்பட வைக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்தனர்.

அதன் பலனாக, கடந்த அக்டோபர் மாதம் 1ந்தேதி முதல், மதுரை விமான நிலையம் 24 மணி நேரமும் செயல்படும் என அறிவிப்பு வெளியானது. இதனைதொடர்ந்து, இரவு நேரங்களில் விமானங்கள் இயக்குவது தொடர்பாக பல்வேறு விமான நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மதுரையில் இருந்து சென்னை வழியாக மலேசியாவின் பினாங்கு நகருக்கு இன்று (வெள்ளிக்கிழமை) முதல் புதிய விமான சேவை தொடங்கப்பட இருக்கிறது.

இதுகுறித்து விமான நிலைய இயக்குனர் கூறியதாவது:

அக்டோபர் 1ந்தேதி முதல் 24 மணி நேரமும் மதுரை விமான நிலையம் செயல்படும் என்ற அறிவிப்பு வெளிவந்ததில் இருந்து அதற்கான அனைத்து பணிகளும் செய்யப்பட்டன. அன்றைய தினத்தில் இருந்து 24 மணி நேரமும் விமான நிலையம் செயல்பட பணியாளர்களை நியமித்து இருக்கிறோம்.

கடந்த காலங்களில் காலை 6 மணி முதல் 2 மணி வரை, மதியம் 2 மணி முதல் இரவு 10 மணி வரை என்ற 2 சுழற்சி முறையில் பணிகள் ஒதுக்கப்பட்டன. தற்போது இரவு நேர விமான பயணிகளை கையாளும் வகையில், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை 3வது சுழற்சியாக பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் விமான அதிகாரிகள், பணியாளர்கள், விமான நிறுவன பணியாளர்கள், மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் உள்ளிட்டோர் அடங்குவர்.

மதுரை விமான நிலையத்தில் இருந்து இரவு நேர விமான சேவை தொடங்க இருக்கிறது. அதன்படி, தனியார் விமானம் இரவு 9 மணிக்கு சென்னையில் புறப்பட்டு, இரவு 10.25 மணிக்கு மதுரை வந்தடைகிறது. அதன்பின்னர், மறு மார்க்கமாக இரவு 10.45 மணிக்கு புறப்பட்டு இரவு 12.05 மணிக்கு சென்னை சென்றடைகிறது.

அதன்பின்னர் அங்கிருந்து பல்வேறு கட்ட சோதனைகளுக்கு பின்னர் மலேசியாவின் பினாங்கு நகருக்கு செல்கிறது. இதுபோல், இரவு நேரங்களில் விமானங்கள் இயக்குவது தொடர்பாக, விமான நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. வரும் காலங்களில் இரவு நேரங்களில் முழுமையாக விமானங்கள் இயக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்: மீன்வளத்துறை அறிவுறுத்தல்



சென்னை, டிச.23

ஆந்திர கடலோரப்பகுதிகள், மத்தியமேற்கு வங்கக்கடல், அதனை ஒட்டிய தென்மேற்கு மற்றும் வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது . இந்த நிலையில், இன்றும், நாளையும் மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகத்தில் சூறைக்காற்று வீசக்கூடும் என்பதால் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது .

# சட்டம் ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த்


ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். என தெரிவித்துள்ளார்.


சென்னை, டிச.22

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் கூறியதாவது ,

நெல்லை நீதிமன்ற வளாகத்தில் இளைஞர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழகத்தையே உலுக்கி உள்ளது. சட்டம், ஒழுங்கு சீர்கேட்டுக்கு, காவல்துறையை தன் வசம் வைத்துள்ள முதல்அமைச்சர் ஸ்டாலின் என்ன பதில் சொல்ல போகிறார்? .

தொடர் கொலைகளால் இதுதமிழ்நாடா? இல்லை கொலை நாடா? என மக்கள்மத்தியில் அச்சம் எழுந்துள்ளது.குற்ற சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி, சட்டம்

# நெல்லை: மணிமுத்தாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவு



நெல்லை, டிச.22

மணிமுத்தாறு அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது குறித்து தமிழக அரசு வெளியிட்டு இருக்கும் செய்தி குறிப்பில்,

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த் தேக்கத்தின் சாதகமான நீர் நிலையை கருத்தில் கொண்டு நடப்பாண்டிற்கான (20242025) முன்னுரிமை பகுதியான 3வது மற்றும் 4வது ரீச்சுகளை சார்ந்த மறைமுக பாசனப் பரப்புகளுக்கு 23.12.2024 முதல் 31.03.2025 முடிய (99 நாட்கள்) நீர் இருப்பு மற்றும் வரத்தைப் பொறுத்து தேவைக்கேற்ப பிசான பருவ சாகுபடி செய்வதற்காக தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன் மூலம் திருநெல்வேலி மாவட்டம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் நாங்குநேரி, திசையன்விளை, ராதாபுரம், ஏரல், திருவைகுண்டம், சாத்தான்குளம் மற்றும் திருச்செந்தூர் வட்டங்களில் உள்ள 12,018 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரூர் அருகே தனியார் பஸ் கவிழ்ந்து விபத்து




கரூர், டிச.22

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் இருந்து கோயம்புத்தூருக்கு தனியார் சொகுசு பஸ் ஒன்று இரவு புறப்பட்டது.

இந்த பஸ் கரூர் மாவட்டம் லாலாபேட்டை ரெயில்வே மேம்பாலத்தில் நேற்று நள்ளிரவு சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து சென்டர் கட்டையில் மோதி கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த லாலாபேட்டை போலீசார் கிரேன் உதவியுடன் பஸ்ஸை அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

இதில் பஸ் டிரைவர், கிளீனர், 2 பெண் பயணிகள் உட்பட 6 பேர் பயணம் செய்த நிலையில், அதிஷ்டவசமாக 6 பேரும் லேசான காயங்களுடன் உயிர் தப்பினர்.

இந்தநிலையில் தேசிய நெடுஞ்சாலையில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதால் அங்கு சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மேலும் விபத்து குறித்து பஸ் டிரைவரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்பட்டது.

# மேட்டூர் அனல்மின் நிலைய விபத்து: உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு நிவாரணம்: அமைச்சர் வழங்கினார்



சேலம், டிச.22

சேலம் மாவட்டம், மேட்டூர் அனல் மின் நிலையத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தின் காரணமாக காயமடைந்து மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் தலா ரூ.2 லட்சத்திற்கான காசோலையினை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் இன்று (20.12.2024) வழங்கினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சேலம் மாவட்டம், தமிழ்நாடு மின் உற்பத்திக் கழகத்தின் மேட்டூர் அனல் மின் நிலையத்தில் மாலை நிலக்கரி சுமைப்பான் (Coal Bunker) ஒன்று எதிர்பாராத விதமாகச் சரிந்து விழுந்ததால் அந்த இடத்தில் பணி செய்து கொண்டிருந்த ஏழு ஒப்பந்தத் தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். அவர்களில் காயமடைந்த ஐந்து பேர் உடனடியாக மீட்டு முதலுதவிக்குப் பிறகு மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு தற்போது நலமாக உள்ளனர். இவ்விபத்தில் சிக்கிய வெங்கடேசன் மற்றும் பழனிசாமி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்அமைச்சரின் உத்தரவுப்படி, சுற்றுலா அமைச்சரும், சேலம் மாவட்ட ஆட்சியரும் உயிரிழந்த நபர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். மேலும், தமிழக முதல்அமைச்சரின் ஆணைப்படி, விபத்தில் சிக்கி உயிரிழந்த இருவரது குடும்பத்தினருக்கும் தலா பத்து லட்சம் ரூபாயும், காயம் அடைந்து சிகிச்சை பெற்று வரும் ஐந்து பேருக்கும் தலா இரண்டு லட்ச ரூபாயும் நிவாரணமாக சுற்றுலா துறை அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமிக்கு சட்டம் ஒழுங்கு பற்றி பேச தகுதி இல்லை: அமைச்சர் ரகுபதி



சென்னை, டிச.22

அமைச்சர் ரகுபதி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

திருநெல்வேலி மாவட்டம் கீழநத்தத்தை சேர்ந்த மாயாண்டி என்பவர் கொலை வழக்கு ஒன்றில் ஆஜராகி திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றத்திற்கு வரும் வழியில், நீதிமன்றத்திற்கு வெளியே கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடந்த போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் கொலையாளிகளை விரட்டி சென்று ஒருவரை மடக்கிப்பிடித்துள்ளனர். காரில் தப்பி சென்ற மற்றவர்களையும் கொலை நடந்த இரண்டே மணி நேரத்தில் தமிழ்நாடு காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதுவரை நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

இவ்வளவு துரிதமாக செயல்பட்டு கொலையாளிகள் உடனடியாக கைது செய்யப்பட்டதை பொறுக்க முடியாமல், வழக்கம் போல சட்டம் ஒழுங்கு சரியில்லை என்ற பொய்யை பாடத்தொடங்கியிருக்கிறார் எதிர்கட்சித் தலைவர்.

கடந்த அதிமுக ஆட்சியின்போதுதூத்துக்குடியில் வாழ்வாதார உரிமைக்காக போராடிய அப்பாவி மக்கள் 13 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரத்தை; மறுநாள் காலையில் டி. வியில் பார்த்து தான் தெரிந்து கொண்டேன் என பொய் சொன்ன எடப்பாடி பழனிசாமிக்கு சட்டம் ஒழுங்கு பற்றி பேச எந்த தகுதியும் இல்லை.


சாத்தான்குளம் தந்தை மகன் அடித்துக் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை, கொடைநாடு கொலை சம்பவம் என பொதுமக்கள் வெளியில் நடமாடவே அச்சப்படும் சூழலில் தமிழ்நாடு தவித்துக்கிடந்ததை மறந்துவிட்டீர்களா பழனிசாமி?

மத்திய அரசின் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் அதிமுக ஆட்சியில் குற்றச்செயல்கள் பல்கிப் பெருகிக் கிடந்ததை வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

அதன்படி 2020ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 8,91,700 ஆகும். 2022ஆம் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை 1,93,913 என மேலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவுகளை பார்க்கும் போதே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாட்டை எவராலும் எளிதில் புரிந்து கொள்ள முடியும் ஆனால் ஒருவருக்கு மட்டும் புரியவே புரியாது அவர் தான் பழனிசாமி.

பழனிசாமிக்கு தற்போது மக்கள் நலன் பேணும் முதல்அமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சியைக் கண்டு பொறாமை வருவது இயல்பு தான். என தெரிவித்துள்ளார் .

# நிலவுக்கு என் மேல் என்னடி கோபம் படத்தின் ஏடி பாடல் வெளியீடு




தனுஷ், ராஜ் கிரண் நடித்த 'பவர் பாண்டி படம் மூலம் இயக்குனராக அறிமுகமானார். இதனைத் தொடர்ந்து தனுஷ் கடைசியாக இயக்கி, நடித்த 'ராயன்' படம் கடந்த மாதம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. தனுஷ் இயக்கத்தில் மூன்றாவது திரைப்படமாக 'நிலவுக்கு என் மேல் என்னடி கோபம்' உருவாகியுள்ளது. இந்த படத்தின் மூலம் தனுஷின் சகோதரி மகன் பவிஷ் ஹீரோவாக அறிமுகமாகிறார். அனிகா சுரேந்திரன், பிரியா பிரகாஷ் வாரியர், மாத்யூ தாமஸ், வெங்கடேஷ் மேனன் உட்பட பலர் நடிக்கின்றனர். ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைக்கும் இந்தப் படத்தை வுண்டர்பார் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

இந்தபடத்தின்முதல்பாடலாக'கோல்டன்ஸ்பாரோ'பாடல்வெளியானது. நடிகை பிரியங்கா மோகன் கேமியோ ரோலில் நடித்துள்ள இந்த பாடல் நல்ல வரவேற்பை பெற்றது. இப்பாடல்சுமார்100 மில்லியன்பார்வைகளை கடந்துள்ளது. இப்படத்தின் இரண்டாவது பாடலான 'காதல் பெயில்' என்ற பாடலை தனுஷ் எழுதி பாடியுள்ளார்.

இந்த நிலையில் படத்தின் 3வது பாடலான 'ஏடி' வெளியாகியுள்ளது.விவேக் எழுதிய இப்பாடலை தனுஷ் மற்றும் ஜோனிடா காந்தி பாடியுள்ளனர்.

# 'விடாமுயற்சி' படத்தில் இணைந்த நடிகை ரம்யா



தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான அஜித், துணிவு படத்தை தொடர்ந்து 'விடாமுயற்சி' படத்தில் நடித்துள்ளார். மகிழ்த்திருமேனி இயக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். லைகா நிறுவனம் இப்படத்தை தயாரித்துள்ளது. இந்த படத்தில் அர்ஜுன், திரிஷா, ரெஜினா, சந்தீப் கிஷன், ஆரவ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வரும் பொங்கல் பண்டிகை அன்று இப்படம் வெளியாக உள்ளது. சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியானது. அதில், எல்லோரும் எல்லாமும் கைவிடும்போது உன்னை நம்பு.... என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது.

இந்நிலையில், இப்படத்தின் அடுத்த அப்டேட்டை படக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. அதன்படி, 'விடாமுயற்சி' திரைப்படத்தில் நடிகை ரம்யா இணைந்துள்ளதாக புகைப்படத்தை வெளியிட்டு படக்குழு அறிவித்திருக்கிறது.

தமிழில் கடந்த 2007ம் ஆண்டு வெளியான மொழி படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானவர் ரம்யா சுப்பிரமணியன். கடந்த 2004ம் ஆண்டு மிஸ் சென்னை போட்டியில் பங்கேற்ற இவர், அடுத்து கலக்கப்போவது யார் என்ற நிகழ்ச்சியின் மூலம் சின்னத்திரையில் என்ட்ரி ஆனார். தொடர்ந்து, உங்களில் யார் அடுத்த பிரபுதேவா, நம்ம வீட்டு கல்யாணம், கேடி பாய்ஸ் கில்லாடி கேர்ள்ஸ் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளில் விஜேவாக பணியாற்றியுள்ளார். தொடர்ந்து படங்களிலும் கவனம் செலுத்திய அவர், மங்காத்தா, ஓகே கண்மணி, மாஸ், வனமகன், ஆடை, மாஸ்டர் ஆகிய படங்களில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார். இவர் நடிப்பில் கடைசியாக சங்கத்தலைவன் படம் வெளியானது. சமூக வலைதளங்களில் ஆக்டீவாக இருக்கும் விஜே ரம்யா அவ்வப்போது தனது புகைப்படம மற்றும் வீடியோக்களை பதிவிட்டு வருகிறார்.

# நடிகர் ஜெய் நடித்த 'பேபி & பேபி' திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது

தமிழ் சினிமாவில் 'சுப்பிரமணியபுரம்', 'எங்கேயும் எப்போதும்' ஆகிய படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் கவனம் பெற்றவர் நடிகர் ஜெய். இவர் தற்போது 'பேபி & பேபி' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் ஜெய் உடன் சத்யராஜ் மற்றும் யோகி பாபு நடித்துள்ளனர். இப்படத்தை அறிமுக இயக்குநர் பிரதாப் இயக்கியுள்ளார். அழகான பேமிலி எண்டர்டெயினராக இப்படம் உருவாகி உள்ளது. தமிழ் சினிமாவில் ரசிகர்கள் குடும்பங்களோடு இணைந்து ரசிக்கும் படங்கள் வருவது அரிதாகிவிட்டது. அந்த வகையில், குடும்ப உறவுகளின் பின்னணியில், குழந்தைகளை மையப்படுத்தி, அனைத்து தரப்பினரும் கொண்டாடும் வகையில் இப்படத்தின் திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது.

காமெடியும், எமோஷனும் சம அளவில் கலந்து ஒரு அசத்தலான பேமிலி எண்டர்டெயினராக இப்படத்தை உருவாக்கி வருகிறார், அறிமுக இயக்குநர் பிரதாப். இப்படத்தில் ஜெய் நாயகனாக நடிக்க, நடிகர் சத்யராஜ் திருப்புமுனை பாத்திரத்திலும், யோகி பாபு மிக முக்கிய பாத்திரத்திலும் நடிப்பதாக கூறப்படுகிறது.

நாளைய தீர்ப்பு படத்தில், விஜய்யின் முதல் கதாநாயகியாகவும் மற்றும் பவித்ரா படத்தில் அஜித்தின் ஜோடியாகவும் நடித்த, நடிகை கீர்த்தனா இப்படத்தில் ஜெய்யின் அம்மாவாகவும், நடிகர் சத்யராஜுக்கு ஜோடியாகவும் நடித்து, மீண்டும் திரையில் களமிறங்கி உள்ளார். நடிகை பிரக்யா நாக்ரா ஜெய்யின் ஜோடியாக நடிக்கிறார்.

இவர்களுடன் ஆனந்தராஜ், ஸ்ரீமன், மொட்டை ராஜேந்திரன், ரெடின் கிங்ஸ்லி, இளவரசு, சிங்கம்புலி, நிழல்கள் ரவி, கே.பி.ஒய்.ராமர், கே.பி.ஒய்.தங்கதுரை, ஆர்.ஜே.விக்னேஷ்காந்த், சேசு ஆகியோர் இணைந்து நடிக்கின்றார்கள். மற்றொரு நாயகியாக புதுமுகம் சாய் தன்யா நடிக்கின்றனர். இப்படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு பொள்ளாச்சி மற்றும் பாலக்காடு பகுதிகளில் படமாக்கப்பட்டுள்ள நிலையில், இதன் இரண்டாம் கட்டப் படப்பிடிப்பு சென்னை சுற்று வட்டார பகுதிகளிலும், வெளிநாடுகளிலும் படமாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை இசையமைப்பாளர் டி.இமான் வெளியிட்டுள்ளார். மேலும் டீசர் மார்றும் டிரெய்லர் விரைவில் வெளியாக இருக்கிறது.

# நிகழ்ச்சி மேடையில் பெங்களூரு ரசிகர்களை கலாய்த்த சென்னை கேப்டன் கெய்க்வாட்.. என்ன நடந்தது..?



இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல். க்கு உலக கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு உள்ளது. பல வெளிநாட்டு அணிகளின் நட்சத்திர வீரர்கள் இதில் கலந்துகொண்டு விளையாடுவது சிறப்பம்சமாகும். இதுவரை 17 ஐ.பி.எல். சீசன்கள் நிறைவடைந்துள்ளன. 18வது சீசன் அடுத்தாண்டு நடைபெற உள்ளது.

இதில் அதிகபட்சமாக மும்பை இந்தியன்ஸ் மற்றும் சென்னை சூப்பர் கிங்ஸ் தலா 5 முறை கோப்பையை வென்றுள்ளன. விராட் கோலி உள்ளிட்ட நட்சத்திர வீரர்கள் அடங்கிய ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 17 சீசன்களாக ஒரு கோப்பையை கூட வெல்லவில்லை என்றாலும் ரசிகர்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த அணிகளில் ஒன்றாக உள்ளது.

இதில் கடந்த சீசனில் வருங்காலத்தை கருத்தில் கொண்டு சென்னை அணியின் கேப்டன் பொறுப்பை ருதுராஜ் கெய்க்வாட் கையில் ஒப்படைத்த மகேந்திரசிங் தோனி சாதாரண வீரராக விளையாடி வருகிறார். எனினும் புதிய கேப்டன் கெய்க்வாட் தலைமையில்விளையாடியசென்னைஅணிகடந்தசீசனில்லீக்சுற்றோடுவெளியேறியது.

இந்நிலையில் பெங்களூருவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ருதுராஜ் கெய்க்வாட் பங்கு பெற்றார். அப்போது ருதுராஜ் பேசும்போது அவருடைய மைக் ஆப் செய்யப்பட்டது. இதனை அடுத்து மேடையில் இருந்த தொகுப்பாளர் ருதுராஜ் பேசும்போது அவருடைய மைக்கை ஆப் செய்தது யார்? என்று கேட்டார்.

இதற்கு உடனடியாக பதில் அளித்த ருதுராஜ், 'ஆர்சிபி ரசிகர்கள் யாராவது இதை செய்திருக்கலாம்' என்று கலாய்த்தார். உடனே அங்கு இருந்த ரசிகர்கள் அனைவரும் சிரித்தனர். இந்த வீடியோ தற்போது சமூக வலைதளத்தில் வைரல் ஆகி வருகிறது.

முன்னதாக கடந்த சீசனில் முக்கியமான லீக் போட்டியில் சென்னையை தோற்கடித்து பெங்களூரு அணி பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியது. இதனால் பெங்களூரு அணியின் அந்த வெற்றியை ரசிகர்களும் வீரர்களும் வெறித்தனமாக கொண்டாடினர். இதனை மனதில் வைத்து ருதுராஜ் மேடையில் அவ்வாறு பேசியதாக ஆர்சிபி ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# பார்டர் கவாஸ்கர் கோப்பை: பும்ராவுடன் அவர் இருந்திருந்தால்.. ஆஸி. முன்னாள் வீரர் கருத்து



இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 3 போட்டிகள் முடிவடைந்த நிலையில் தொடர் 11 என்ற கணக்கில் சமனில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 4வது போட்டி வரும் 26ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியில் ஜஸ்பிரித் பும்ரா மட்டுமேபந்துவீச்சில்ஆஸ்திரேலியஅணிக்குஅச்சுறுத்தலை கொடுத்து வருகிறார். 3 போட்டிகள் முடிவில் இதுவரை 21 விக்கெட்டுகள் வீழ்த்தி அசத்தியுள்ளார். இவருக்கு அடுத்து இந்தியாதரப்பில்சிராஜ்13விக்கெட்டுகள்கைப்பற்றியுள்ளார்.

இந்நிலையில் ஜஸ்பிரித் பும்ரா உலக கிரிக்கெட்டில் மிகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளர் என்று ஆஸ்திரேலிய முன்னாள் வீரர்பிரெட்லீபாராட்டு தெரிவித்துள்ளார். மேலும்தற்சமயத்தில்உள்ளமற்றபவுலர்களைவிடபும்ராமிகவும்தொலைவில் சிறந்த பவுலராக இருப்பதாகவும் அவர் பாராட்டியுள்ளார். அப்படிப்பட்ட அவருடன் முகமது ஷமி இருந்திருந்தால் இத்தொடரில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை தெறிக்க விட்டிருக்கும் என்றும் பிரட் லீ கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "ஜஸ்பிரித் பும்ரா உலகத்தரம் வாய்ந்தவர். துரதிர்ஷ்டவசமாக இந்திய அணியில் முகமது ஷமி இல்லை. பும்ராவுடன் அவர் இருந்திருந்தால் இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு அச்சுறுத்தலை கொடுத்திருக்கும். சிராஜ் கொஞ்சம் தடுமாற்றமாக செயல்பட்டாலும் பும்ரா நன்றாக பந்து வீசியுள்ளார். என்னுடைய கருத்துப்படி இந்திய அணி சில நல்ல வேகப்பந்து வீச்சாளர்களுடன் நல்ல அட்டாக்கை கொண்டுள்ளது.

ஆனாலும் ஜஸ்பிரித் பும்ரா சுமையை சுமக்கிறார் என்று மக்கள் சொல்கிறார்கள். அந்தளவுக்கு பும்ரா மிகவும் நன்றாக பந்து வீசுகிறார். அவர் மற்ற பவுலர்களை விட மிகவும் அதிக மைல்கள் தொலைவில் முன்னோக்கி இருக்கிறார். இதுஉலகில்விளையாடும்மற்றபவுலர்களுக்கு அவமரியாதையாக சொல்லவில்லை. ஆனால் ஜஸ்பிரித் பும்ரா அந்தளவுக்கு நன்றாக செயல்படுகிறார்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.